அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS













# தமிழ் ஆண்டு 8

# செப்பனிடப்பட்ட வரலாற்றுப் பாடங்கள்









# தமிழ்

## ஆண்டு 8

## TAMIL YEAR 8



அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# 7 ஈழத்தமிழர் வரலாறு

ஈழத்தில் இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் மொழியால் தம்மைத் தனியோர் இனமாக அடையாளப்படுத்தி வாழ்ந்ததைச் சான்றுகள் உறுதி செய்கின்றன. மேலும், இச்சான்றுகள் ஈழத்தில் தமிழ்மொழி பேசிய மக்கள் பரந்த அளவில் வாழ்ந்ததையும் ஈழத்தமிழரிடையே சங்க காலத்தை ஒத்த தமிழ் அரசமரபு தோன்றியிருந்ததையும் தெரிவிக்கின்றன. ஈழத்தில் தோன்றிய அரசுகளின் நடுவண் அரசாக அநுராதபுரம் இருந்தது.

அநுராதபுர நடுவண் அரசை கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரை தமிழ் மன்னர்களும் சிங்கள மன்னர்களும் மாறிமாறி ஆளுகை செய்தனர். அவர்களுள் சேனன், குத்திகன் ஆகிய தமிழ் மன்னர்கள் அநுராதபுர நடுவண் அரசின் முன்னோடிகள் ஆவர். இவர்கள் 22 ஆண்டுகள் (கி.மு. 237 - 215) அறம் தவறாது ஆளுகை செய்தனர்.

இவர்களுக்குப் பின் எல்லாளன் (கி.மு. 205 - 161) என்ற தமிழ் மன்னன் 44 ஆண்டுகள் ஈழம் முழுவதையும் ஆளுகை செய்தார். இவரே ஈழத்தில் நீண்டகாலம் ஆளுகை செய்த மன்னன் ஆவார். இவருடைய நெறி தவறாத ஆட்சியால் இன்றுவரை ஈழ மக்கள் அனைவராலும் போற்றப்படும் மன்னராக விளங்குகிறார். எல்லாளனுடைய ஆட்சிக் காலத்தில் தென் ஈழத்தில் 32 தமிழ்ச் சிற்றரசர்களின் ஆளுகை நிலவியிருந்தமையை வரலாற்றுச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. எல்லாள மன்னனின் நினைவிடம் ஒன்று அநுராதபுரத்தில் உள்ளது.

எல்லாளனுக்குப் பின் புலகதன், பாகியன், பிளையமாறன், பளையமாறன், த ாடிகன் (கி.மு. 103 - 88) ஆகியோரும், கிறித்துவுக்குப் பிற்பட்ட காலத்தில் இளநாகன் (கி.பி. 38 - 44), சந்தமுகசிவன் (கி.பி. 44 - 52), பண்டு (கி.பி. 436 - 441), பரிந்தன் (கி.பி. 441 - 444), குட்டபரிந்தன் (கி.பி. 444 - 460), திரிதன், தாடிகன் (கி.பி. 460 - 463) ஆகிய தமிழ் மன்னர்களும் அநுராதபுரத்தை மையமாகக் கொண்டு ஆளுகை புரிந்தனர்.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து ஆளுகை புரிந்த பரிந்தனின் அறகமக் கல்வெட்டும் தாடிகனின் கதிர்காமக் கல்வெட்டும் தமிழ் மன்னர்களின் மேலாண்மை தென் ஈழம் வரை பரவியிருந்ததை உறுதிப்படுத்துகின்றன.

ஈழத்தமிழர்களின் வரலாறு கி.பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்து அரசியல், பொருளாதார மற்றும் பண்பாடுகளில் மாற்றங்களைக் காணத்தொடங்கியது. இதற்குத் தமிழகத்தில் பல்லவர் ஆட்சியோடு பௌத்த, சமண மதங்களுக்கு எதிராகத் தோன்றிய பக்தி இயக்கமும் அரசியல், கடல்சார் வணிகம், பண்பாடு ஆகிய துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களும் முக்கிய காரணங்களாகும்.

இந்த மாற்றங்கள் ஈழத்திலும் செல்வாக்கு செலுத்தியதால், இதுவரை ஈழம் முழுவதும் பரந்து வாழ்ந்துகொண்டிருந்த தமிழர்களுள் பெரும்பாலானவர்கள் தமிழகத்திற்கு

அண்மையில் அமைந்திருக்கும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் செறிவாக வாழத்தொடங்கினர். 7ஆம் நூற்றாண்டின் பின்னர் தென்னிந்தியாவில் இருந்து அரச மரபினர் ஈழத்தின் மீது அடிக்கடி படையெடுத்தனர்.

தென்னிந்தியாவில் பரந்த பேரரசை உருவாக்கிய சோழர்கள் கி.பி. 993இல் அநுராதபுர அரசைக் கைப்பற்றினர். பொலநறுவையைத் தமது புதிய தலைநகராகவும் தமிழ்மொழியை ஆட்சி மொழியாகவும் கொண்டு 77 ஆண்டுகள் ஈழம் முழுவதையும் ஆட்சி செய்தனர். சோழ அரசின் தலைநகராகப் பொலநறுவை இருந்தபோதும் அவர்களின் அரசியல், பொருளாதார, பண்பாடு சார்ந்த நடவடிக்கைகள் பெருமளவுக்கு வடக்கு, கிழக்கு பகுதிகளிலேயே செல்வாக்குப் பெற்றிருந்தன. அவ்வேளை திருகோணமலை சோழரின் இரண்டாவது தலைநகராகச் செயற்பட்டது.

1070இல் இருந்து பொலநறுவையில் சிங்கள மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டது. அதன் பின்னர் 1215இல் தென்னிந்தியாவிலிருந்து படையெடுத்து வந்த கலிங்கமாகன் பொலநறுவை அரசைக் கைப்பற்றி நீண்டகாலம் ஆட்சிபுரிந்தார். இவரது ஆட்சிக்காலத்தில் ஈழத்தின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் பரந்த தமிழரசு ஒன்று வலுப்பெற்றது. அவ்வரசு வன்னியில் தோன்றியதாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட வலுவான தமிழரசு ஒன்று உருவாகியது. 1505இல் போர்த்துக்கேயர் ஈழத்திற்கு வருகைதரும்போது தமிழீழப் பகுதியில் யாழ்ப்பாணத் தமிழரசும் வன்னித் தமிழ்ச்சிற்றரசுகளும் ஏனைய பகுதியில் கண்டி அரசும் கரையோரக் கோட்டை அரசும் இருந்தன.

பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பியர் ஈழத்தில் முழுமையான மேலாண்மை செலுத்தும் வரை ஈழத்தமிழர்கள் வடக்கு, கிழக்கு பகுதிகள் அடங்கியதான தமது மரபுவழித் தாயகமான தமிழீழத்தில் ஒரு நிலைபெற்ற தேசிய இனக்கட்டமைப்பாகத் தமது சொந்த அரசர்களால் ஆளப்பட்டு வந்தனர்.

**சொற்கள்**

ஆளுகை | கல்வெட்டு | சிற்றரசர் | தமிழகம் | தலைநகரம் | நினைவிடம்
படையெடுப்பு | பேரரசு | மரபுவழித்தாயகம் | முன்னோடிகள்

**வினாக்களுக்கு விடை கூறுக:**

1. அநுராதபுர நடுவண் அரசின் முன்னோடிகள் யாவர்?
2. ஈழம் முழுவதையும் நீண்ட காலம் ஆளுகைசெய்த தமிழ்மன்னன் யார்?
3. தமிழ் மன்னர்களின் மேலாண்மை தென் ஈழம் வரை பரவியிருந்தமையை உறுதிப்படுத்தும் சான்றுகள் எவை?
4. ஈழத்தில் சோழர் ஆட்சி ஏற்பட்டபோது இரண்டாவது தலைநகராக இருந்தது எது?
5. யாழ்ப்பாணத்தில் உருவாகிய தமிழரசின் தலைநகரம் எது?
6. போர்த்துக்கேயர் ஈழத்திற்கு வருகைதரும்போது ஈழத்தில் இருந்த அரசுகள் எவை?

**தகவல் பெட்டகம்**

## பிராமி எழுத்துகள்

இந்தியாவில் வழங்கப்பட்ட பண்டைய எழுத்து வகைகளில் பிராமி எழுத்து வடிவமும் ஒன்று. இப்பெயருக்கான காரணங்கள் பலவகையில் அறியப்பட்டுள்ளன. இந்தியாவில் இருந்த பௌத்த, சமண இறைநெறி இலக்கியங்களின் சான்றுகளின் அடிப்படையில் இவ்வெழுத்து வடிவத்துக்கு ‘பிராமி’ (1886) என்று பெயரிட்டவர் டெர்ரியன் – டி – லாக்கோப்பெரி என்ற பிரெஞ்சு அறிஞரே ஆவார். இவ்வெழுத்துகள் அவற்றைப் பயன்படுத்திய நாடுகளுக்கேற்ப பலவாறாக அழைக்கப்பட்டன. எ.கா: அசோகன் பிராமி, வட பிராமி.

எழுத்துகளின் பழைமையை ஆராய்வோர் பிராமி எழுத்து தமிழுக்கு முன்னையது என்றும், அவை தமிழ் எழுத்துகளுக்குப் பின்னையது என்றும் வெவ்வேறு வகையான கருத்துகளை முன்வைக்கின்றனர். எனினும், ‘தமிழி’ என்று கூறப்படும் தமிழ் எழுத்துகளே பழைமை வாய்ந்தன எனும் கருத்துக்குச் சார்பாகப் பல தொல்பொருள் சான்றுகள் கிடைத்துள்ளன.



யம்பை தமிழ் பிராமி கல்வெட்டு. விழுப்புரம் மாவட்டத்தில் திருக்கோவிலூருக்கு அருகே உள்ளது. இது சங்க காலத்தைச் (400 BCE) சேர்ந்தது.

சான்று: **சங்ககாலத் தமிழ் எழுத்துகள்**
முனைவர் **மா.பவானி,** கல்வெட்டியல் துறை, உதவிப்பேராசிரியர்